செ.வெ.எண்: 36 /ஜூலை நாள்:23.07.2016

# செய்தி வெளியீடு

## <u>தியாகி சுப்பிரமணியசிவா நினைவு நாளையொட்டி அவரது நினைவிடத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன் இ.ஆ.ப. அவர்கள் மலர் தூவி அஞ்சலி</u>



தியாகி சுப்பிரமணியசிவா அவர்களின் 91-ஆவது நினைவு நாளையொட்டி, தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் இன்று (23.07.2016) தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்.இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து தியாகி சுப்பிரமணியசிவா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள தியாகி சுப்பிரமணியசிவா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், ஒன்றியக்குழுத் தலைவர் திரு.டி.ஆர்.மதியழகன், பேரூராட்சித்தலைவர் திரு.அ.பாபு, மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.எம்.கே.வேலுமணி, ஊராட்சித்தலைவர் திரு.பெ.பச்சை, ஒன்றியக்குழு உறுப்பினர் பரமசிவம், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, வட்டாட்சியர் திரு. ரவிச்சந்திரன், தியாகி சுப்பிரமணிய சிவா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.சி.மணி மற்றும் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், சுதந்திரப்போராட்டத் தியாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

தருமபுரி